**கவனிக்க.-** *2018.06.08 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2076 - 2018 ජුනි මස 14 වැනි බ්‍රහස්පතින්දා - 2018.06.14

*2076 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு யூன் மாதம் 14 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி III – காணிகள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| காணிச்சீர்திருத்த ஆணைக்குழுவின் அறிவித்தல்கள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்ட அறிவித்தல்கள் | 106 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 108 |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2018, யூலை மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2018, யூன் மாதம் 22 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

105- B81421-353(2018/06)

# காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்ட அறிவித்தல்கள்

*இணைப்பு 09.*

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

வட மேல் மாகாண சபையின் குருநாகல் மாவட்டத்தில் அமைந்துள்ள றஸ்னாயகபுர பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர் ஆகிய முஹம்மது றசீத் முஹம்மது இம்ரான் ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ், அதி உத்தமராம் சனாதிபதி அவர்களினால் 1995.12.12 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள குரு/பிர 49332 ஆம் இலக்க அளிப்புப்பத்திரத்தின் உரிமையாளரான, கல்லங்சிய, றஸ்னாயகபுர எனும் முகவரியில் வசிக்கும் ஜயகொடி ஆரச்சிலகே பியதாச என்பவருக்கு கையளிக்கப்பட்டு, நிகவெரடிய மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் நிக/றஸ்/04/78 ஆம் இலக்கத்தின் கீழ் 1996.01.26 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்குப் பின்னுரிமையாளராவதற்குச் சட்ட ரீதியான உரிமையாளர் இல்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால், குறித்த அளிப்புப்பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2018.07.26 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

### அட்டவணை

குருநாகல் நிருவாக மாவட்டத்தின், றஸ்னாயகபுர பிரதேச செயலாளர் பிரிவின் வன்னிஹத்பத்துவே மாகுல் படஹிர கோறளையிலுள்ள கல்லங்சிய - 278 கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த கல்லங்சிய எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும், நில அளவையாளர் நாயகத்தின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும், நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு அ. க. பி. 2399 ஆம் இரேகை வரைபில் M ஆம் இலக்க காணித் துண்டெனக் காட்டப்பட்டுள்ளதும் 0.808 ஹெக்டெயர் விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித்துண்டு திவுல்கஹ வத்த:

வடக்கு : அ. க. பி. 2399 காணித் துண்டு இல. L ;
கிழக்கு : காணித் துண்டு இல. 95 மற்றும் காணித் துண்டு இல. 96;
தெற்கு : காணித் துண்டு இல. 104;
மேற்கு : காணித் துண்டு இல. 101.

எம். ஆர். எம். இம்ரான்,
பிரதேச செயலாளர்,
றஸ்னாயகபுர

2018, மாச்சு 27.

6 - 696/1

*இணைப்பு 09.*

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல்செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

வட மேல் மாகாண சபையின் குருநாகல் மாவட்டத்தில் அமைந்துள்ள றஸ்னாயகபுர பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர் ஆகிய முஹம்மது றசீத் முஹம்மது இம்ரான் ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ், அதி உத்தமராம் சனாதிபதி அவர்களினால் 1989.11.30 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள குரு/பிர 21725 ஆம் இலக்க அளிப்புப்பத்திரத்தின் உரிமையாளரான, நம்முவாவெஹீலோகம எனும் முகவரியில் வசிக்கும் றாஜகோபால முதியன் ஸலகே நாவூர் பிச்சை மரியன் பீபீ என்பவருக்கு கையளிக்கப்பட்டு, நிகவெரடிய மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் நிக/என்/04/20 ஆம் இலக்கத்தின் கீழ் 1991.05.14 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்குப் பின்னுரிமையாளராவதற்குச் சட்ட ரீதியான உரிமையாளர் இல்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால், குறித்த அளிப்புப்பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்துநீக்குதல் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படு கின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2018.07.26 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

### அட்டவணை

குருநாகல் நிருவாக மாவட்டத்தின் றஸ்னாயகபுர பிரதேச செயலாளர் பிரிவின் வன்னி ஹத்பத்துவே மாகுல் படஹிர கோறளையிலுள்ள நம்முவாவெ - 291 கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த நம்முவாவெ எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும், நில அளவையாளர் நாயகத்தின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும், நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு அ. க. பி. 2397 ஆம் இரேகை வரைபில் 237 ஆம் இலக்க காணித் துண்டெனக் காட்டப்பட்டுள்ளதும் 1.317 ஹெக்டெயர் விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித்துண்டு - நாகன்சோல மூகலான:

வடக்கு : காணித் துண்டு இல. 178 மற்றும் காணித் துண்டு இல. 238;
கிழக்கு : காணித் துண்டு இல. 236;
தெற்கு : காணித் துண்டு இல. 233;
மேற்கு : காணித் துண்டு இல. 239 மற்றும் காணித் துண்டு 238.

எம். ஆர். எம். இம்ரான்,
பிரதேச செயலாளர்,
றஸ்னாயகபுர

2018, மாச்சு 27.

6 - 696/2

இணைப்பு 09.

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அளிப்புப் பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

*வடமேல் மாகாண சபையின் குருநாகல் மாவட்டத்தில் அமைந்துள்ள பன்னல பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர்/பிரதிக் காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கு இடைப்பட்ட) ஆர்.எம்.எஸ். விக்ரமரத்ன பண்டார ஆகிய, காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ், அதி உத்தமராம் சனாதிபதி அவர்களினால் 1988.02.10 ஆம் திகதி வழங்கப்பட்டுள்ள குரு/ப்ர 19181 ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான போபிடிய எலிபச்சிய எனும் முகவரியில் வசிக்கும் கனதெ ஆரச்சிகே முனிதாச என்பவருக்கு கையளிக்கப்பட்டு, குளியாபிட்டிய மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் குளி/பீ/5/221 ஆம் இலக்கத்தின் கீழ் 1990.08.17 ஆம் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்குச் சட்ட ரீதியான உரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்புப் பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருத்தால் அவற்றை 2018.07.27 ஆம் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.*

**அட்டவணை**

*குருநாகல் நிருவாக மாவட்டத்தின் பன்னல பிரதேச செயலாளர் பிரிவின் மெதபத்து நெகெனாஹிர கோறளையிலுள்ள 1578 - எலிபச்சிய கிராம அலுவலர் பிரவைச் சேர்ந்த எலிபச்சிய எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் நில அளவையாளர் நாயகத்தின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும், நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு 23 ஆம் இலக்க வெளிக்களத் தாளில் தயாரிக்கப்பட்டு துண்டு பிரிக்கும் வரைபடத்தில் எப். வி. பி. 356 இரேகை வரைதலில் 368 ஆம் இலக்க காணித் துண்டெனக் காட்டப்பட்டதும் 0.213 ஹெக்டெயார் விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித்துண்டு. காணியின் பெயர் : மஹயாய ஜனபதய:*

*வடக்கு : காணித்துண்டு இலக்கம் 365;*
*கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 367;*
*தெற்கு : காணித்துண்டு இலக்கம்361 ஜனபத பாதை;*
*மேற்கு : காணித்துண்டு இலக்கம் 369.*

*ஆர். எம். எஸ். விக்ரமரத்ன பண்டார,*
*பிரதேச செயலாளர்,*
*பன்னல.*

*பிரதேச செயலகம்,*
*2017, திசெம்பர் 19.*

*6 - 696/3*

இணைப்பு 09.

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

*மத்திய மாகாண சபையின் மாத்தளை மாவட்டத்தில் அமைந்துள்ள உக்குவளை பிரதேச செயலாளர் பிரிவில், பிரதேச செயலாளர் ஈ. டப்ளியு. என். ஏ. எகொடவெல ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தில் 19(4) உட் பிரிவின் கீழ் அதி உத்தமராம் சனாதிபதி அவர்களால் 1985.01.30 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள மாத்தளை/ப்ர/4322 ஆம் இலக்க அளிப்புப்பத்திரத்தின் உரிமையாளரான உக்குவலை வரகாமுற உக்குவலை வத்த கொலனி இலக்கம் 13 எனும் முகவரியில் வசிக்கும் மதார் சாஹிப் ரஹினுன் பிபி என்பவருக்கு கையளிக்கப்பட்டு மாத்தளை மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் மா/83/882/91 ஆம் இலக்கத்தின் கீழ் 1991.09.10 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்குப் பின்னுரிமையாளராவதற்குச் சட்டரீதியான உரிமையாளர் இல்லாத காரணத்தால் அல்லது உரிமையானவர் இருந்தும் அவர் பின்னுரிமையாளாராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால், குறித்த அளிப்புப்பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2018.07.15 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.*

**அட்டவணை**

*மாத்தளை நிருவாக மாவட்டத்தின் உக்குவலை பிரதேச செயலாளர் பிரிவின் மாத்தளை மெதசியபற்றில் வரகாமுற கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த வரகாமுற எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும், நிலஅளவையாளர் நாயகத்தின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும், நிலஅளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 54/3/2 (ஐ 20/5, 13) ஆம் இலக்க வெளிக்களத் தாளில் மற்றும் மா. 683 ஆம் இலக்க துண்டு பிரிக்கும் வரைபடத்தில் 13 ஆம் இலக்கக் காணித் துண்டெனக் காட்டப்பட்டுள்ளதும் 0.121 ஹெக்டயார் விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரசக் காணித்துண்டு :*

*வடக்கு : துண்டு இல. 12;*
*கிழக்கு : உக்குவள வத்த (சொந்த காணி);*
*தெற்கு : தோட்ட வீதி;*
*மேற்கு : துண்டு இல.11 (வீதி).*

*ஈ. டபிள்யு. என். ஏ. எகொட வெல,*
*பிரதேச செயலாளர்,*
*உக்குவலை.*

*2018, பெப்புருவரி 15.*

*6 - 697*

# நானாவித காணி அறிவித்தல்கள்

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.:- 4/10/37070.
மாகாணக் காணி ஆணையாளரின் இல. :- பலாத்/இகொ/ இ7/ முன்/தீ.ப./2/6

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

புத்தளம் மாவட்டம், ஆராச்சிக்கட்டு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இல. 562 எப், சின்னப்பாடு கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த கீழ் அத்தங்கனைய எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் பு 81 இலக்க வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 177 எனக் காட்டப்பட்டுள்ளதும் சுமார் 01 ரூட் 26 பேர்ச்சஸ் விஸ்தீரமுள்ளதுமான அரச காணியை சமூக தேவை நோக்கத்திற்காகக் குத்தகைக்கு தருமாறு கேட்டுத் ஆராச்சிக்கட்டு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் விண்ணப்பித்துள்ளது என இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு :-

வடக்கு : பி பி 6821/16 ;
கிழக்கு : பு 81 வரைபடத்திலுள்ள கா. து. இல. 179, 178 ;
தெற்கு : பிரதேச சபைப் பாதை ;
மேற்கு : பிரதேச சபைப் பாதை.

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்.**- முப்பது (30) வருடங்கள் (2013.11.08 தொடக்கம் 2043.11.07 வரை);

**வருடாந்தக் குத்தகை.**- பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டிற்கமைய 2018 ஆம் வருடத்திற்கான காணியின் அபிவிருத்தி செய்யப்படாத பெறுமதியின் 2% வருடாந்த குத்தகையாக கொடுபடல் வேண்டும்;

தவணைப் பணம் .- இல்லை;

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒருவருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி சங்க நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(ஈ) பிரதேச செயலாளர், மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(உ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளபோது குத்தகைக் காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்திசெய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் ;

(எ) 2013.11.08 ஆம் திகதியிலிருந்து குறைந்தது 05 வருடங்கள் நிறைவு பெறும் வரையினும் இந்தக் காணி குத்தகைக்குப் பெற்றுள்ள நோக்கத்தை நிறைவு செய்வதற்கான கீழ்க்குத்தகை அல்லது மாற்றும் செய்தல் தவிர்ந்த, வேறு எவ்வித கீழ்க்குத்தகை அல்லது கைமாற்றம் செய்தல் அனுமதிக்கப்படமாட்டாது;

(ஏ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

04. இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை கீழே குறிக்கப்பட்டுள்ள தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக்குத்தகை வழங்கப்படும்.

வை. வை. என். பெரேரா,
மாகாணக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகத்தமெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2018, யூன் 14.

6 - 698

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.